செய்தி வெளியீடு எண்: 19 நாள்: 14.05.2018.

## *தேனி மாவட்டம்,*
## *மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்*
## *வேலைவாய்ப்புத்துறையின் சார்பில்*
## *திறன் மேம்பாட்டு விழிப்புணர்வு பிரச்சாரத்தினை*
## *துவக்கி வைத்தார் :-*

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (14.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடையே திறன் மேம்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் பிரச்சாரத்தினை துவக்கி வைத்தார்.

அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் ஒளிபரப்பப்பட்ட குறும்படத்தினை பார்வையிட்ட பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்தின் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் மற்றும் சுயவேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக தனியார் பங்களிப்புடன் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி காலத்தில் தங்கும் வசதி அல்லது நாளொன்றுக்கு ரூ.100/- போக்குவரத்து செலவிற்காக வழங்கப்படும். பயிற்சி முடிவுற்ற பின் சான்றிதழ் வழங்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். திறன் பயிற்சி தேவைப்படும் நபர்கள் தங்களது அருகாமையில் உள்ள பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி பெற்றிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை கிராமப்புற பொதுமக்கள் தெரிந்து பயன்படுத்துவதற்கு ஏதுவாக கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளவும், பிரச்சாரத்தின் போதே பயிற்சி தேவைப்படுவர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று விரைவில் பயிற்சி வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திறன் பயிற்சி தேவைப்படுபவர்கள் www.tnskill.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாகவோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்தின் மூலம் வாகனப்பராமரிப்பு, கட்டுமானம், இலகு பொறியியல், தொலைத்தொடர்பு, ஊடகம்/பொழுதுபோக்கு, விருந்தோம்பல், அழகு கலை, ஜவுளி/ஆயத்த ஆடை, உணவு பதனிடுதல், வேளாண்மை, போக்குவரத்து, தோல் மற்றும் தோல் பொருட்கள், வங்கி நிதி சேவை (ம) காப்பீடு, சுகாதாரம், பாதுகாப்பு சேவைகள், சில்லரை வர்த்தகம், பசுமை பணிகள், ஆபரணங்கள் தயாரித்தல், இரசாயம் மற்றும் பிளாஸ்டிக், தகவல் தொழில்நுட்பத்துறை இது போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினை வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர் திரு.கலைச்செல்வன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் (பொ) செல்வி கவிதா அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**